## வாய்மூலமாக உள்ளெடுத்தால்

- மூச்சுவிடுவதில் கடினம் ஏற்படின் வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு செல்ல வேண்டும்.
- வாந்தி எடுப்பதால் ஆபத்து ஏற்படலாம். எனவே வாந்தி எடுப்பதைத் தூண்டுதல் கூடாது.

## Reference


* Management of Poisoning, EU, Medical defence Organization (Private) Limitted
* HPA Compendium of Chemical Hazards
  Health Protection Agency.



தயாரிப்பு ஆலோசனை :
*வைத்திய கலாநிதி N.சிவராஜா*
*சமுதாய குடும்ப மருத்துவத்துறை,*
*மருத்துவபீடம், யாழ்ப்பல்கலைக்கழகம்.*

தயாரிப்பு உதவி :
*வை.சிவதர்ஷினி (2010/FM/074)*
*மருத்துவபீடம்,*
*யாழ்பல்கலைக்கழகம்.*


# பெற்றோலியப் பதார்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் முதலுதவி


வெளியீடு :

*சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,*
*சமுதாய குடும்ப மருத்துவத்துறை,*
*மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்*
*ஏப்ரல் 2014*

## பெற்றோலியப் பதார்த்தங்கள் தோலில் அதிகளவில் தொடுகையுறுவதால் பாதிப்பு ஏற்பட்டால்

- பாதிப்படைந்தவரை அவ்விடத்திலிருந்து அகற்றவும்
- பெற்றோலியம் பட்ட உடைகளை மாற்றவேண்டும்.
- தோலின் மீதுள்ள பெற்றோலியப் பதார்த்தங்களை துடைத்து அகற்ற வேண்டும்
- பெற்றோலியம் பட்ட தலைமுடி, பாகங்களை சவர்க்காரம், மென்சூடுநீர் ஆகியவை கொண்டு தூய்மையாக்கவும்.
- தோல்மடிப்புக்கள், அக்குள், காது, விரல் நகங்கள், இனப்பெருக்கப் பகுதிகள் என்பவை தூய்மையாக கழுவப்பட வேண்டும்.
- எரிகாயங்கள் உடலின் 15% ஐவிட அதிகாக ஏற்பட்டிருப்பின் நீரிழப்பை தவிர்க்க முதலுதவி வழங்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு நிலைமை மோசமாக இருப்பின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.

## கண்களில் பெற்றோலியம் தொடுகையுற்றால்

- பாதிப்படைந்தவரை அவ்விடத்திலிருந்து மேலும் அகற்றி தொடுகையுறுவதனைத் தடுத்தல்
- கண்களில் தொடுவில்லை அணிந்திருப்பின் அவற்றை அகற்றுதல்
- உடனடியாக கண்களை நீரினால் ஆகக்குறைந்தது 10-15 நிமிடங்கள் வரை கழுவவேண்டும்
- விழிவெண்திரையில் பாதிப்பு ஏற்பட்டிருப்பின் அல்லது குணங்குறிகள் குறைந்த நேரத்திற்குள் நீங்காதுவிடின் உடனடியாக கண் வைத்திய நிபுணரின் வைத்தியசாலைக்கு செல்லவும்.

## சுவாசிப்பதன் மூலமாக பாதிப்படைந்த ஒருவருக்கு

- அவ்விடத்தை விட்டு அகற்றி நன்கு காற்றோட்டமுள்ள இடத்தில் சேர்த்தல்
- மூச்சுவிடுவதில் கடினம், மூச்சுத்திணறல் அதிகரித்த சுவாச வீதம் ஏற்படின் ஒட்சிசன் வழங்கப்பட வேண்டும். எனவே வைத்தியசாலைக்கு எடுத்து செல்லவும்.
- வைத்தியசாலையில் பெற்றோலிய வாயுவை சுவாசிப்பதன் பின்னர் இந்நிலையினைப் பெற்றார் என்பதை வைத்தியரிடம் தெளிவுபடுத்தவும் ஏனெனில் சில மருந்துகள் இவருக்கு இந்நிலையில் ஆபத்தை ஏற்படுத்தலாம்.
- தலைச்சுற்று தடுமாற்றம் என்பன ஏற்படினும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்